




. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 11.02.2026 . மலர் 04 . இதழ் 41 . புதன்கிழமை . NAGERCOIL EDITION . 11.02.2026 . VOL 04 . ISSUE 41 . WEDNESDAY . 4 PAGES . Rs. 5







## திமுகவா? அதிமுகவா? தவெகவா?... தேமுதிக எந்தப்பக்கம்?

# திரிசங்கு நிலையில் பிரேமலதா !

## பயங்கர குழப்பத்தில் தொண்டர்கள் !!



சென்னை, பிப்.11-

திமுக கூட்டணியா? அதிமுக கூட்டணியா? தவெக கூட்டணியா? என முடிவெடுக்க முடியாமல் வழக்கம் போல் திரிசங்கு நிலையில் இருக்கிறார் பிரேமலதா, "இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாவதற்கு முன்னதாக, யாருடன் கூட்டணி எனச் சொல்லி விடுவோம்" என அடுத்த கெடுவை வைத்திருக்கிறார்.

பிரேமலதா தங்கள் பக்கம் வந்தால் 'சிறப்பு' என கணிக்கிறது திமுக தலைமை. ஆனால், விருத்தாசலம் காங்கிரஸ் எம்எல்ஏ-வான எம்.ஆர்.ராதாகிருஷ்ணனும், ரிஷிவந்தியம் திமுக எம்எல்ஏ-வான வசந்தம் க.கார்த்திகேயனும் 'திமுக கூட்டணிக்கு தேமுதிக வந்துவிடக் கூடாது தெய்வமே...' என இஷ்ட தெய்வங்களை எல்லாம் 'இன்ஸ்டால்மென்ட்டில்' வேண்டிக் கொண்டே இருக்கிறார்களாம்.

கடந்த 2006 தேர்தலில் விருத்தாசலம் தொகுதியில் முதன் முதலாக தனித்துப் போட்டியிட்டு வெற்றிக் கொடி நாட்டினார் விஜயகாந்த். அதற்கு அடுத்த தேர்தலிலும் இங்கு தேமுதிக-வுக்கே ஜெயம் கிட்டியது. இதனால், விருத்தாசலத்தின் மீது தேமுதிக-வுக்கு எப்போதுமே தனி பிரியம் உண்டு. இதேபோல் 2011 தேர்தலில் ரிஷிவந்தியம் தொகுதியில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் விஜயகாந்த். இதனால் இந்தத் தொகுதியையும் மறக்காமல் தனது விருப்பப் பட்டியலில் வைத்திருக்கிறது தேமுதிக.

இம்முறை, தேமுதிக திமுக கூட்டணிக்கு வருமேயானால் இந்த இரண்டு தொகுதிகளில் ஒன்றை நிச்சயம் தங்களுக்குக் கேட்கும். விருத்தாசலத்தைக் கேட்டால் கூட திமுக விட்டுக் கொடுத்துவிடும் ஆனால், ரிஷிவந்தியமானது கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளரான வசந்தம் கார்த்திகேயனின் தொகுதி. இதை விட்டுத் தருவதில் திமுக-வுக்கு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இருந்த போதும் ரிஷிவந்தியம் கார்த்திகேயனும் விருத்தாசலம் ராதாகிருஷ்ணனும் பிரேமலதாவின் 'பிரேக்கிங் நியூஸ்' எப்போது வெளியாகும் என எதிர்பார்த்து தூக்கம் தொலைத்து நிற்கிறார்கள்.

இது தொடர்பாக பேசிய வசந்தம் கார்த்திகேயனின் ஆதரவாளர்கள், "திமுக கூட்டணிக்கு வந்தால் சென்டிமென்ட்டாக, விஜயகாந்த் போட்டியிட்டு வென்ற விருத்தாசலத்தையும் ரிஷிவந்தியத்தையும் பிரேமலதா பிடிவாதமாகக் கேட்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால், ரிஷிவந்தியத்தில் மீண்டும் நாம் தான் நிற்கப்போகிறோம் என்ற நம்பிக்கையில் வசந்தம் கார்த்திகேயன் கடந்த முறை தனக்கு வாக்களிக்காத மக்களையும் தன்னை நோக்கி திருப்பி இருக்கிறார். இவ்வளவையும் செய்துவிட்டு கூட்டணி முடிவால் தொகுதி நம் கைவிட்டுப் போய்விடுமோ என்ற கவலை அவருக்கு இருக்கிறது. அப்படி ஏதும் நடந்து விடாதபடிக்கு தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்" என்றனர்.

ராதாகிருஷ்ணின் விசுவாசிகளோ, "விருத்தாசலத்தில் கடந்த முறை ராதாகிருஷ்ணன் பார்டரில் தான் பாஸானார். அதன் பிறகு, கடலூர் மேற்கு மாவட்ட திமுக செயலாளரான அமைச்சர் சி.வெ.கணேசனிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட அவர், இம்முறையும் தொகுதியை தனக்கே வசப்படுத்திக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் கடந்த ஒரு வருட காலமாக செய்து வருகிறார். இருந்தாலும் கூட்டணிக் கட்சி தான் என்பதால் விருத்தாசலத்தை தேமுதிக-வுக்குக் கொடுத்து விட்டு காங்கிரஸுக்கு வேறு தொகுதியை ஒதுக்குவதற்கு திமுக சற்றும் தயங்காது என்பதால் கார்த்திகேயனைவிட நம்மாளு ரொம்பவே கலங்கிப் போயிருக்கிறார்" என்றனர்.

இது இப்படி என்றால், தேமுதிக தொண்டர்களோ அண்ணியாரின் முடிவு தெரியாமல் மண்டை காய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## காங்கிரசுடன் மோதலா? - கனிமொழி விளக்கம்

ராமநாதபுரம், பிப்.11-

"திமுக தலைமைக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் இணக்கமான நல்லுறவு உள்ளது. அதனால் கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. வரக்கூடிய தேர்தலில் நிச்சயமாக இணைந்து செயல்படுவோம்" என திமுக எம்.பி கனிமொழி தெரிவித்தார்.

ராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி, ஆட்சியில் பங்கு வேண்டும் என சில தனி நபர்கள் பேசுகிறார்கள், அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. திமுக தலைமைக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் இணக்கமான நல்லுறவு உள்ளது. அதனால் கூட்டணிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. வரக்கூடிய தேர்தலில் நிச்சயமாக இணைந்து செயல்படுவோம். காங்கிரஸுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்" என்றார்.

## ராமநாதபுரத்தில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கூட்டம்

## துணைப் பொதுச்செயலாளர் கனிமொழியிடம் கோரிக்கை மனுக்கள் குவிந்தன!



ராமநாதபுரம், பிப்.11-

தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி தலைமைக் கழக அறிவிப்பின்படி சட்டமன்றத் தேர்தல் 2026 திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கூட்டம் திமுக துணைப் பொதுச் செயலாளர் எம் பி கனிமொழி தலைமையில் ராமநாதபுரத்தில் தனியார் மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் ராமநாதபுரம் மாவட்ட தொழிற்சங்க நிர்வாகிகள், வர்த்தக சங்க நிர்வாகிகள், மீனவர் சங்க நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள், கல்வியாளர்கள், சிறு குறு தொழில் முனைவோர்கள், மாணவர் சங்க பிரதிநிதிகள், டாக்டர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகள், திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு பல்வேறு கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கினர்.


இதில் குறிப்பாக கண்மாய்கள் குளங்கள் தூர்வார வேண்டும், நகர் பகுதியில் கோயில்கள் பள்ளிவாசல்கள் கிறிஸ்துவ ஆலயங்கள் மருத்துவமனைகள் அருகே செயல்படும் மதுபான கடைகளை அகற்ற வேண்டும், ராமநாதபுரம் நகரில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி துவங்கப் பட வேண்டும், தொழில் பூங்கா அமைக்க வேண்டும், காணாமல் போன ஊரணிகளை ஆக்கிரமிப்பு பிடியிலிருந்து மீட்க வேண்டும், மீனவர்களின் நீண்ட நாள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மனுக்களாக வழங்கினர்.

## தருமபுரியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி, பிப்ரவரி. 11-

தருமபுரியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மாவட்ட பாரதிய ஜனதா மகளிர் அணி ஏற்பாட்டில் தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறிய திமுக அரசை கண்டித்து தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் மாவட்ட தலைவர் சரவணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தருமபுரி மாவட்ட அதிமுக மாவட்ட செயலாளர் கே. பி. அன்பழகன், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ். ஆர். வெற்றிவேல், நகர செயலாளர் பூக்கடை ரவி, மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் அசோகன், தருமபுரி மாவட்ட அமமுக மாவட்டச் செயலாளர் டி. கே. ராஜேந்திரன், பாமக மாவட்ட செயலாளர் எஸ். பி. வெங்கடேஸ்வரன் எம் எல் ஏ ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். இதில் பாஜக மாவட்ட மகளிரணி தலைவி கலையரசி, மாநிலச் செயலாளர் ராதிகா, பொதுச்செயலாளர்கள் பிரவீன், சங்கீதா, கணேசன் ,ஓ பி சி மாவட்ட தலைவர் சசிகுமார், தருமபுரி நகரத் தலைவர் சாய் ஆறுமுகம், பொதுச் செயலாளர் பிரபாவதி, புனிதா மற்றும் மாவட்ட, நகர, பேரூர், ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



ஈரோடு திண்டல் வேலாயுதசுவாமி ஆலய புனராவர்த்தன அபிராமி அம்பிகை உடனுறை அமிர்தகடேஸ்வரர் நூதன ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா வருகின்ற 22 ந் தேதி நடைபெறுகிறது இதை யொட்டி நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட கலந்து கொண்டனர்.

## உடலில் மது பாட்டில்களைக் கட்டிக்கொண்டு ஆட்சியர் அலுவலகம் வந்த சமூக ஆர்வலரால் பரபரப்பு



தூத்துக்குடி, பிப்.11–

மதுவினால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க, ஆதார் அட்டை அடிப்படையில் மட்டுமே மது வழங்க வேண்டும் என வலியுறுத்தி, உடலில் மது பாட்டில்களைக் கட்டிக்கொண்டு சமூக ஆர்வலர் ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் பாலகிருஷ்ணன், மதுவிற்கு எதிராகத் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார். முன்னதாக, காலி மது பாட்டில்களை அரசு டாஸ்மாக் கடைகளிலேயே திரும்பப் பெற வேண்டும் என்ற இவரது போராட்டம் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்று காலை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்த பாலகிருஷ்ணன், தனது உடலில் மூன்று மது பாட்டில்களைக் கயிறு மூலம் கட்டியிருந்தார். போராட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய பாலகிருஷ்ணன் தெரிவித்ததாவது: "தமிழக அரசு டாஸ்மாக் கடைகளில் ஒரு நபருக்கு அளவில்லாமல் மது வழங்குவதால், குடிமகன்களின் உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இதனால் பல குடும்பங்கள் சீரழிவு, சிதைவதோடு, இளம் பெண்கள் விதவையாகும் அவலநிலை ஏற்படுகிறது.

எனவே, மதுப்பிரியர்களுக்கு ஆதார் அட்டை அடிப்படையில் குறைந்த அளவு மதுவை மட்டுமே வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.மது பாட்டில்களுடன் அலுவலகத்திற்குள் நுழைய முயன்ற பாலகிருஷ்ணனை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். உடலில் கட்டப்பட்டுள்ள பாட்டில்களை அகற்றுமாறு அவர்கள் உத்தரவிட்டனர். அதற்கு அவர், "என்னால் கழற்ற முடியாது, நீங்களே கழற்றிக் கொள்ளுங்கள்" எனக் கூறவே, போலீசாருக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இறுதியில், காவல்துறையினர் மற்றும் அங்கிருந்த பொதுமக்கள் இணைந்து அவரது உடலில் கட்டப்பட்டிருந்த மது பாட்டில்களைப் போராடி அகற்றினர். ஆட்சியர் அலுவலகத்திற்கு இது போன்ற பொருட்களுடன் வரக்கூடாது எனப் பாலகிருஷ்ணனை எச்சரித்த காவல்துறையினர், அவரிடம் விசாரணை நடத்தினர். பின்னர், கோரிக்கை மனுவை மாவட்ட ஆட்சியரிடம் அளிக்க அவரை அனுமதித்தனர்.இந்த நூதனப் போராட்டத்தால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க கோரி ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் முற்றுகை



தூத்துக்குடி, பிப்.11-

மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க கோரிக்கை ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் முற்றுகையிட்டனர். பயிர்கள் கருகும் அபாயம் உள்ளதால் மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வசுவப்பனேரி, மீரான்குளம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கருகிய பயிர்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். பின்னர் அவர்கள் ஆட்சியரிடம் அளித்த மனுவில், "கடந்த ஆண்டு போதிய பருவ மழை பெய்யாத காரணத்தினால், தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரங்களாக விளங்கும் குளங்கள் முழுமையாக நிரம்பவில்லை.

குறிப்பாக, வல்லகுளம், அரசர்குளம், பெருமாள் குளம், மீரான் குளம், புதுக்குளம், வெட்டிகுளம், தேர்க்கன்குளம், கட்டாரிமங்கலம், அறிவான்மொழி பகுதிகளில் உள்ள குளங்கள் தற்போது வறண்டு காணப்படுகின்றன. குளங்களில் தண்ணீர் இல்லாததால், வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் வேளாண் பயிர்கள் அனைத்தும் தற்போது வாடிய நிலையில் உள்ளன.

நிலைமை இதே போல் நீடித்தால், பயிர்கள் முற்றிலும் அழிந்து விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டமும், மன உளைச்சலும் ஏற்படும். ஆகையால் வேளாண் பயிர்களைக் காப்பாற்ற, மணிமுத்தாறு அணை 3-ஆவது கால்வாய் வழியாக உடனடியாகத் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆட்சியரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !




குமரி மாவட்டம் சகாய நகர் ஊராட்சிக்குட்பட்ட விசுவாசபுரம் அரசு தொடக்க பள்ளி ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நடைபெற்ற நிகழ்வானது வட்டாரக் கல்வி அலுவலர் ( நாகர்கோவில் (பொறுப்பு) திருமலைக் குமார் மற்றும் கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் தளவாய் சுந்தரம் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. தலைமை ஆசிரியை உதயகுமாரி அனைவரையும் வரவேற்றார். ஆசிரியை ஷஜீனாபேகம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக தோவாளை ஒன்றிய பெருந்தலைவர் சாந்தினி பகவதியப்பன், முன்னாள் கவுன்சிலர் தருமர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பெருநிதி கொடையாளர் அல்போன்ஸ், இராஜேந்திரன் (குறளகம்), வசந்தராஜா, மணிசங்கர், ஜெயினுலாவுதீன், முருகன் ராஜம், சித்திரக்கனி, நந்தினி,அன்னலட்சுமி, முத்துகிருஷ்ணன், பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், இல்லம் தேடிக்கல்வி, ஆசிரியைகள், கல்வியாளர் ஜெயராஜ், ஜெயா (கல்வித்துறை),தன்னார்வலர்கள் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.முன்னாள் மாணவர் லக்ஷ்மணன் (ருத்ரா அறக்கட்டளை) நன்றி கூறினார்.

# விளாத்திகுளம் அருகே வெவ்வேறு பகுதியில் இருவர் தூக்கிட்டு தற்கொலை

விளாத்திகுளம், பிப்ரவரி. 11–

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள க. குமராபுரம் கிராமத்தைச் சேர்ந்த திருமால் ரெட்டியார் என்பவரின் மகன் வையணன்(90), இவர் குடும்ப பிரச்சினை காரணமாக மனவாரத்தில் இருந்ததாக கூறப்படுகிறது இந்நிலையில் க. குமராபுரத்தில் வீட்டில் மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.
அதைப்போல் விளாத்திகுளம் அருகே உள்ள கமலாபுரம் கிராமத்தை சேர்ந்த இளையராஜா என்பவரின் மகன் முருகேசன் (36), கட்டிடத் தொழிலாளியான இவர் அதிக குடிப்பழக்கம் காரணமாக அடிக்கடி வீட்டில் சண்டையிடுவதை வழக்கமாக வைத்துள்ளார். இந்நிலையில் தற்கொலை செய்யப் போவதாக மிரட்டி வந்த நபர் வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் மின்விசிறியில் வேஷ்டிகள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.
விளாத்திகுளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வெவ்வேறு பகுதியில் நடைபெற்ற இந்த தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் தலைமை மற்றும் மாவட்ட வருவாய் துறை செயலாளர் தீனதயாளன் நில அளவையர் சங்கம் சுதர்சன் கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் விநாயகம் கிராம உதவியாளர்கள் சங்கம் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் மறியல் போராட்டம் நடைபெற்றது போராட்டத்தில் உடனடியாக அரசாணையாக வெளியிடக் கோரி மறியல் போராட்டம் நடைபெற்றது

# நீலகிரியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடக்கம்



நீலகிரி, பிப்ரவரி. 11-

நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சிறுவர் மன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யாதண்ணீரு ஆகியோர் தலைமையில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.என்.ராஜீ காங்கிரஸ் எம்எல்ஏ கணேஷ் நகராட்சி ஆணையாளர் கணேசன் நகரமன்ற தலைவி வாணீஸ்வரி துணை தலைவர் ரவிக்குமார் நகரச் செயலாளர் மற்றும் திட்டகுழு உறுப்பினர் ஜார்ஜ் ரமேஷ் மேற்கு மண்டல நகரச் செயலாளர் பொருளாளர் நாசர்அலி மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் கவுசிலர்கள் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார்கள் அமைச்சர் சில தூய்மை பணியாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி காலை உணவு விரிவாக்க திட்டத்தை துவக்கி வைத்தார். இதில் சுமார் 400 க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.காலை சிற்றுண்டி திட்டத்தை அமைச்சர் துவக்கி வைக்க அனைவருக்கும் காலை சிற்றுண்டி உணவுகள் வழங்கப்பட்டது.

# தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 9425 மாணவ-மாணவியர்களுக்கு மடிக்கணினி திருவள்ளூர் கலெக்டர் பிரதாப் தலைமையில் அமைச்சர் நாசர் வழங்கினார்!



திருவள்ளூர், பிப்.11-

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருப்பாச்சூர் தனியார் திருமண மண்டபத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் .சா.மு.நாசர், மாவட்ட ஆட்சித் தலைவர் .மு.பிரதாப், தலைமையில் தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான "உலகம் உங்கள் கையில்" உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 102 தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 9425 மாணவ- மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

பின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கூறியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் தலைமையில், தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான உலகம் உங்கள் கையில் என்ற நிகழ்ச்சியின் கீழ், உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் 05.01.2026

அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் துவக்கப்பட்டது. கல்வி அனைவருக்கும், உயர்வு ஒவ்வொருவருக்கும் என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த டெல், ஏசர் போன்ற உலகத்தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் பல்வேறு மென்பொருள்கள் நிறுவப்பட்டுள்ளன. நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக எம்.எஸ். ஆபீஸ் 365, செயற்கை நுண்ணறிவு மென்பொருள் 6 மாதசந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. இது தவிர உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்படுகிறது. டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப துறை, மென் பொருள் உருவாக்கம், தரவு உள்ளீடு, டிஜிட்டல் சந்தைப் படுத்தல். வரைகலை வடிவமைப்பு, குறியிடுதல், வலை வடிவமைப்பு. செயற்கை நுண்ணறிவு கருவிகள் போன்ற துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளைப் பெறும் புதிய தலை முறை என்ற அளவில் தகுதியானவர்களாக மாணவர்களை மாற்ற உதவுகிறது.

இதனால் குடும்ப வருமானம் உயர்ந்து, கிராம நகர இடை வெளி குறைந்து, தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழில் முயற்சிகளும் உருவாகும் வாய்ப்பு அமையும். உலகம் உங்கள் கையில் என்ற திட்டம் தமிழ்நாட்டின் மாபெரும்

டிஜிட்டல் கனவையும் நனவாக்கும் வரலாற்றுப் பெருமைகள் சேர்க்கும் மாபெரும் கல்விப் புரட்சித் திட்டமாகும். திருவள்ளூர் மாவட்டத்தில், முதற்கட்டமாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்கு மொத்தம் 4308 மடிக்கணினிகள் 05.01.2026 அன்று வழங்கப்பட்டது. மற்றும் அதன் தொடர்ச்சியாக இறுதியாண்டிற்கு முந்தைய மாணவர்களுக்கு 4231 மடிக்கணினிகள் வழங்கப்பட்டது. ஆக மொத்தம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் 31 தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் இறுதியாண்டு மாணவ மாணவியர்களுக்கு 4481 மடிக்கணினிகள் 27.01.2026 அன்று வழங்கப்பட்டது மற்றும் அதன் தொடர்ச்சியாக 102 தனியார் கல்வி நிறுவனங்கயில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 9425 மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் மொத்த

மாணவர்களின் எண்ணிக்கை 8539. தனியார் கல்வி நிறுவனம் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 18337. திருவள்ளூர் மாவட்டத்தில் ஆக மொத்தம் 26876 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்கள் அனைவருக்கும் நல்ல

எதிர்காலம் அமைய எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கூறினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி),டி.ஜே.கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் வை.ஜெயக்குமார், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் பா.உதயமலர் பாண்டியன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) யுவராஜ், உதவி இயக்குநர் (பயிற்சி) மோகன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், திரளான மாணவ-மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# சாத்தாங்குப்பம் அருள்மிகு ராஜகணபதி ஆலயம் மஹா கும்பாபிஷேக விழா



கேளம்பாக்கம் பிப். 11-

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சாத்தாங்குப்பம் கமலா நகரில் அருள்பாலித்து வரும், அருள்மிகு ராஜகணபதி ஆலயம் மஹா கும்பாபிஷேகம் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் வள்ளி தேவசேனா சமேத, சிவசுப்பிரமணியர்,கால பைரவர் உட்பட நவகிரகங்களுக்கு சிவாச்சாரியார்களால் வேதம் மந்திரங்கள் சொல்லப்பட்டு புனித நீரை மங்கள வாத்தியம் முழங்க கோபுர கலசத்தின் மீது ஊற்றினர் அதனைத் தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். அதன் பின்னர் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்றது இந்த தரிசனம் காண வருகை புரிந்த பக்தர்கள் அனைவருக்கும் கோயில் நிர்வாகம் சார்பில் மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது இதற்கான ஏற்பாடுகளை. கேளம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் ராணி எல்லையப்பன், சாத்தாங்குளம் விரிவாக்க பகுதி குடியிருப்போர் நல சங்கத் தலைவர் எக்ஸ்பிரஸ் எல்லையப்பன், ஆலய தலைவர் முருகேசன் மற்றும் ஆலய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அனைவரும் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.



சென்னை வேளச்சேரி, காந்தி ரோட்டில் எஸ். எஸ் ஹைதராபாத் பிரியாணி கடை, கிளை திறப்பு விழா வெகு கோலாகலமாக திறக்கப்பட்டது.

# ரப்பர் தோட்டத்தில் வெறி கொண்டு துரத்திய காட்டு யானை உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஓடிய தொழிலாளிகள்



விளவங்கோடு, பிப்ரவரி. 11-

கடையாலுமூடு பேரூராட்சிக்கு உட்பட்ட வழுக்கம்பாறை பகுதியில் ஏராளமான மக்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் அதிகாலை நேரம் சுமார் 4:30 மணியளவில் பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளிகள் ரப்பர் பால்வெட்டும் வேலைக்கு செல்வதற்காக அங்குள்ள பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு திடீரென காட்டிலிருந்து வந்த ஒற்றை காட்டு யானை பேருந்து நிறுத்தத்தில் நின்ற மக்களை துரத்தியது. இதனால் மக்கள் அச்சம் அடைந்து அளரியடித்து தப்பியோடினர்.



இராமநாதபுரம் மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற நினைவூட்டும் கவாத்து பயிற்சியின் நிறைவு நாளில், காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் காவலர்களின் உடை மற்றும் தளவாடப்பொருட்களை ஆய்வு செய்து, குறைகளைக் கேட்டறிந்தார்,

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் முதுகு தண்டுவட பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரி பொருத்தப்பட்ட விலையில்லா நகரும் வண்டியை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அருமனையில் மத்திய அரசின் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம்




விளவங்கோடு, பிப்ரவரி. 11-

அருமனை நகர பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மத்திய அரசின் சாதனை மற்றும் பட்ஜெட் விளக்கத் தெருமுனை கூட்டம் நெடுங்குளம் சந்திப்பில் ஒன்றிய துணைத் தலைவர் ஐயப்பன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய தலைவர் ஹரிஷ் குமார், மாவட்ட பொதுச்செயலாளர் நந்தினி, மாவட்ட பிரச்சார பிரிவு அமைப்பாளர் சிஜூ காளிதாஸ், மாவட்ட பிரச்சார பிரிவு இணை அமைப்பாளர் மேரி ஆட்லின், மாவட்ட தேசிய மொழிகள் அணி பிரிவு அமைப்பாளர் சதீஷ் சந்திரன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மத்திய அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைத்தனர். இந்த நிகழ்வில் பாஜக மாநில மாவட்ட மற்றும் வட்டார தலைவர்கள் உட்பட கட்சி தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தங்கத்தை பரிமாற்றம் செய்யும் திட்டத்தை நீட்டிக்கும் "தனிஷ்க்"




திருவண்ணாமலை, பிப்.11–

இரண்டு புதிய பண்டிகைக்கால சலுகைகளுடன் 'தங்கத்தை பரிமாற்றம் செய்யும் திட்டத்தை நீட்டிக்கும் தனிஷ்க் மேலும் முன்கூட்டியே தங்கம் வாங்குவோருக்கு 'சிறந்த தங்க விலை' மற்றும் 'தங்கத்தை மாற்றி வைரத்தைப் பெறுவது' ஆகிய திட்டங்களை அறிமுகம் செய்கிறது என திருவண்ணாமலையில் பிரபல தனிஷ்க் நகைக்கடை உரிமையாளர் டி.ரூபன்குமார் பகுதி வணிக மேலாளர் ஏ.இகனிஸஸ் மற்றும் உரிமையாளர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில்

இந்தியா முழுவதும் மக்களின் ஆழமான நம்பிக்கையைப் பெற்ற டாடா குழுமத்தின் நகை பிராண்டான தனிஷ்க், சச்சின் டெண்டுல்கரின் ஆதரவு பெற்ற நாடு தழுவிய திட்டமான 'தங்கத்தை மாற்றும் திட்டத்தை' நீடித்திருக்கிறது. இந்தியக் குடும்பங்கள் தங்கத்தை எளிதாக மாற்றவும், புத்திசாலித்தனமாக வாங்கவும் உதவும் வகையில் இரண்டு புதிய சலுகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள, பழைய தங்கத்தை மாற்றும்போது எந்தக் கழிவும் இல்லாத (0 சதவித டிடக்ஷன்) திட்டத்துடன் சேர்த்து, தற்போது பின்வரும் இரண்டு புதிய சலுகைகளை தனிஷ்க் அறிமுகம் செய்திருக்கிறது: தங்கத்திற்கு முன்கூட்டி பணம் செலுத்தும்போது, வாங்குவோருக்கு சிறந்த தங்க விலை (பிஜிஆர்) தங்கத்திற்குப் பதில் வைரத்தை மாற்றிக்கொள்ளும் வசதி தங்களிடம் இருக்கும் தங்கத்தின் மதிப்பை வெளிக்கொணர்ந்து, பயனடைவதற்கு இந்த கூடுதல் சலுகைகள் வாடிக்கையாளர்களுக்கு அதிக வழிமுறைகளை வழங்குகின்றன. தங்க இறக்குமதி மீது நம் நாடு சார்ந்திருப்பதை குறைப்பதற்கு இது உதவுவதோடு, அதிக தெளிவுடன் ஆபரணங்களை வாங்குவதை வாடிக்கையாளர்கள் திட்டமிடுவதற்கும் இது உதவுகிறது. இந்திய குடும்பங்களில் மட்டும் சுமார் 25ஆயிரம் டன் எடையுள்ள தங்கம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, அதேசமயம் ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டின் தங்கத்திற்கான தேவையில், 99 சதவீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. மக்கள் தங்கள் வீட்டில் வெறுமனே வைக்கப்பட்டிருக்கும் பழைய தங்கத்தை புழக்கத்திற்குக் கொண்டு வந்து, புதிய நகைகளாக மாற்றிக் கொள்வதை ஊக்குவிப்பதன் மூலம், நம் நாடு இறக்குமதி செய்யும் தங்கத்தின் அளவைக் குறைக்கவும், அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தவும் தனிஷ்க் உதவுகிறது.

சிறந்த தங்க விலை (பிஜிஆர்) சலுகை: சிறந்த தங்க விலை (BGR) சலுகையின் கீழ், வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே நகைகளை முன்பதிவு செய்து தங்கத்தின் விலையை உறுதி செய்து கொள்ளலாம். பில் போடும் நேரத்தில், முன்பதிவு செய்த விலை அல்லது அன்றைய சந்தை விலை ஆகிய இரண்டில் எது குறைவாக இருக்கிறதோ, அந்த விலையே வசூலிக்கப்படும். இந்தச் சலுகை 2026 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 25 வரை செய்யப்படும் முன்பதிவுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். தங்க நகைகளை இத்திட்டத்தின் கீழ் வாங்குவதற்கான செயல்முறை (பில்) பிப்ரவரி 25–க்குள் நிறைவு செய்யப்பட வேண்டும். தனிஷ்க் ஸ்டோர்களில், தனிஷ்க் தயாரிப்புகளுடன் சேர்த்து வாங்கப்படும் 'மியா' தயாரிப்புகளுக்கும் இந்தச் சலுகை பொருந்தும். தனிஷ்க் தனது வாடிக்கையாளர்களுக்காக பழைய தங்கத்தை புதிய வைர நகைகளாக மாற்றிக்கொள்ளும் வசதியையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் குடும்பங்கள் தங்கள் பாரம்பரிய தங்க நகைகளை, தற்போதைய விருப்பத்திற்கு ஏற்ப நவீன வைர ஆபரணங்களாக பரிமாற்றம் செய்து கொள்ள முடியும்.

இது குறித்து கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கூறுகையில், "இந்தியக் குடும்பங்களின் முக்கிய தருணங்களிலும், நிகழ்வுகளிலும் தங்கம் எப்போதும் ஒரே மையமாக இருந்து வருகிறது. தனிஷ்க்–ன் தங்க பரிமாற்றத் திட்டம் தங்கள் நகைகளை புதுப்பிப்பதற்கு ஒரு தெளிவான மற்றும் நம்பிக்கையான வழிமுறையை மக்களுக்கு வழங்குகிறது. இத்தகைய புதிய சலுகைகள் சிறப்பாக திட்டமிடவும், தங்கள் நகைகளை புதிதாக தரம் உயர்த்திக் கொள்ளவும் குடும்பங்களுக்கு உதவுவதோடு, நம் நாட்டின் தங்க இறக்குமதி தேவையைக் குறைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன" என்றார்.

30 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் தனிஷ்க்–ன் தங்க பரிமாற்றத் திட்டத்தில் பங்கேற்று, சுமார் 1.7 லட்சம் கிலோ தங்கம் மறுசுழற்சி செய்யப்பட உதவியிருக்கின்றன. தனிஷ்க் நிறுவனத்தின் மொத்த வணிகத்தில் சுமார் 40 சதவீதம் இந்த பரிமாற்றத் திட்டத்தின் மூலம் இப்போது கிடைக்கிறது.

இது நம் நாட்டின் மிகப்பெரிய, ஒருங்கிணைக்கப்பட்ட தங்க மறுசுழற்சி முன்னெடுப்பு திட்டங்களில் முக்கியமானதாக திகழ்கிறது. இந்த புதிய சலுகைகள் மூலம், தனிஷ்க் பெரிய அளவிலான தங்கப் பரிமாற்றம் மற்றும் முன்கூட்டிய கொள்முதல் திட்டங்களில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இது வாய்ப்புகளை வாடிக்கையாளர்களுக்கு நவீன வாங்குவதற்கான நகைகளை வழங்குவதோடு, தங்க இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் இந்திய அரசின் திட்டத்திற்கும் ஆதரவளிக்கிறது.

டாடா குழுமத்தின் மிகவும் பிரபலமான நகை பிராண்டான தனிஷ்க், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சிறந்த கைவினைத்திறன், பிரத்யேக வடிவமைப்புகள் மற்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தரம் ஆகியவற்றிற்கு பெயர்பெற்றது. இந்தியப் பெண்களின் விருப்பங்களைப் புரிந்துகொண்டு, அவர்களின் பாரம்பரிய மற்றும் நவீன விருப்பங்களையும், உலகளாவிய போக்குகளையும் நிறைவேற்றும் ஒரே நகை பிராண்டாக இது திகழ்கிறது. விற்பனை செய்யப்படும் நகைகளின் தூய்மையை உறுதிப்படுத்த, அனைத்து தனிஷ்க் ஸ்டோர்களிலும் 'காரட்மீட்டர்' வசதி உள்ளது.

இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் தங்க நகைகளின் தூய்மையை மிகத் துல்லியமாகச் சரிபார்க்க முடியும். தற்போது தனிஷ்க் நிறுவனம் 300–க்கும் மேற்பட்ட நகரங்களில் 500–க்கும் அதிகமான பிரத்யேக விற்பனை நிலையங்களுடன் செயல்படுகிறது என்றனர்.

# தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும்!

## களியக்காவிளையில் விஜயதரணி பேட்டி!!



மார்த்தாண்டம், பிப்.11-

தேசிய ஜனநாயக கூட்டணி விளவங்கோடு தொகுதி பொறுப்பாளராக முன்னாள் எம் எல் ஏ விஜயதரணி நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று களியக்காவிளை பகுதிக்கு வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திமுக கூட்டணியில் மிக பெரிய விரிசல் விழுந்திருக்கிறதை நாம் பார்க்க முடியும். அந்தவகையில் திமுக காங்கிரஸ் கூட்டணியிலிருந்து வெளியேற வேண்டும் என்று 90% காங்கிரஸ் மக்கள் கோரிக்கையை முன் வைத்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் திமுக வும் அதன் குழுவை அமைக்காமல் தற்போது கூட்டணியில் காங்கிரசை இணைக்க வேண்டுமா? ,வேண்டாமா? என்ற சர்ச்சையில ஈடுபட்டிருப்பதாக தெரிகிறது. ஆகையால் பிரிந்து செல்ல வேண்டிய கட்டாயம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்

ராமதாஸ் அவர்கள் கூட்டணிக்கு வர வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தலைவர் சொல்கிறார். ஆனால் கூட்டணிக்குள் ராமதாஸ் வருவார் என்றால் விடுதலை சிறுத்தை கட்சி வெளியில் செல்வோம் என்று மிக தெளிவாக சொல்லி இருக்கிறார். எனக்கு தெரிந்து ஒரு உறைக்குள் இரண்டு கத்திகள் இருக்க வாய்ப்பு இல்லை. ஆகையால் ஒன்றில் ராமதாஸ் அந்த கூட்டணிக்குள் செல்லவேண்டும் இல்லெயென்றால் திருமாவளவன் கூட்டணியை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணி அதிமுக தலைமையிலான கூட்டணி தமிழகத்தில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. பல்வேறு கட்சிகள் கூட்டணியில் இணைந்து வலுபெற்ற கூட்டணியாக மாறி இருக்கிறது. இந்த கூட்டணி மிக பெரிய வெற்றியை காணும் என்பதில் இரு வேறு கருத்துகள் இல்லை.

தமிழகத்தில் பெண்கள் ,சிறுவர்களுக்கான குற்றங்கள் அதிகரித்து இருக்கிறது. இன்றைக்கு திமுக - விற்கு எதிரான மன நிலையில் மக்கள் தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கிறார்கள். நிச்சயமாக எதிர்தரப்பில் உருவாக்கி இருக்கும் அதிமுக தலைமையிலான கூட்டணி வெற்றி பெறுவதற்கான சாத்திய கூறுகள் உள்ளது. திட்டமே இல்லாத திமுக ஆட்சி அகற்ற பட வேண்டும். இரட்டை என்ஜின் சர்கார் என்று சொல்ல கூடிய மத்தியிலும் மாநிலத்திலும் இணக்கமாக அமைய கூடிய தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்.

கட்சி கூறும் தொகுதியில் போட்டியிட தயாராக இருக்கிறேன். யாரை பார்த்தும் பயப்பட வேண்டிய அவசியம் தேசிய ஜன நாயக கூட்டணிக்கு இல்லை. விஜய் பார்த்து பயப்பட தேவை இல்லை. அச்சுறுத்தும் இடத்திலும் அவர் இல்லை. யாரை பார்த்தும் யாரும் பயப்பட வேண்டிய தேவை இல்லை. ஜனநாயகத்தில் அரசியல் தளம் என்பது எல்லோருக்குமானது.

மஹா சிவாலய ஓட்டம் வரும் பக்தர்களுக்கு 12 கோவில்களிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதில் மெத்தனமாக உள்ளது. திக்குறிச்சி நுழைவு வாயில் இருந்து கோவில் வளாகத்துக்குள் செல்லும் சாலையை உடனடியாக சீரமைக்கவிட்டல் போராட்டம் நடத்த படும் என்று அவர் கூறினார்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!




## மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு விருதுநகர் கலெக்டர் வேண்டுகோள்

விருதுநகர், பிப்.11-

மீனவர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் மற்றும் நலவாரிய உறுப்பினர்கள் தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா கேட்டுக்கொண்டுள்ளார்.

விருதுநகர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் தேசிய மீன்வள டிஜிட்டல் தளம் (NFDP) -என்ற இணையதளத்தில் பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மீனவர் குழு விபத்து காப்பீட்டுத் திட்டத்தின் (GAIS) மூலம் வழங்கப்படும் நிவாரணத் தொகை பெற்றிட தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் (NFDP) பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து உறுப்பினர்களும் அருகாமையிலுள்ள இ-சேவை மையம் மற்றும் சிஷிசி கணினி மையங்களை அணுகி தேசிய மீன்வள டிஜிட்டல் தளத்தில் (NFDP) பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், (பழைய கட்டிடம் இரண்டாவது தளம்) விருதுநகர் - 626 001. தொலைபேசி எண்: 04562-244707 என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.

## மேல்புறத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் : 2425 பேருக்கு பரிசோதனை

நாகர்கோவில், பிப்.11-

விளவங்கோடு தொகுதிக்கு உட்பட்ட மேல்புறத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஸ்டாலின் சிறப்பு முகாம் ஹோலி ஏஞ்சல் மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் நடைபெற்றது.

இதில் இடைக்கோடு, பளுகல், பாகோடு ஆகிய பேரூராட்சிகள் மற்றும் புலியூர்சாலை, தேவி கோடு, முழுக்கோடு ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முகாம் நடந்தது. ஆண்கள் பெண்கள் கர்ப்பிணிகள் என மூன்றாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இதய நல சிறப்பு மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம். நுரையீரல் நீரிழிவு நோய்க்கான மருத்துவம், தோல், பல், கண், காது மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம் உள்ளிட்ட 17 சிறப்பு மருத்துவ சிகிச்சை நிபுணர்களால் சிகிச்சை நடைபெற்றது

இந்த முகாமில் மொத்தம் 2425 பேருக்கு முழு உடல் பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## சுடுகாட்டின் சுற்றுச்சுவரை இடித்து, நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாலை மறியல்



தருமபுரி, பிப்ரவரி.11-

தருமபுரி மாவட்டம் வெங்கட்டம்பட்டி அருகே மாதேமங்கலம் கிராமத்தில் சுமார் 1000 - கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு சுற்றுசுவர் கொண்ட சுடுகாடு உள்ளது. சுடுகாட்டின் அருகே அதே கிராமத்தைச் சேர்ந்த குட்டியப்பன் என்பவரின் மகன் மாதையன் (60) என்பவருக்கு சொந்தமான நிலத்தின் அருகே சுடுகாட்டின் சுற்றுச்சுவர் இருப்பதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வந்த நிலையில் சுற்றுச்சுவரை இடித்து தரும்படி உத்தரவு வந்துள்ளது. உத்தரவுபடி நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் வெங்கடம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் சம்பவ இடத்திற்கு சென்று சுற்றுசுவரை ஜேசிபி இயந்திரம் கொண்டு இடித்துள்ளனர். ஆனால் சுடுகாட்டின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு சுடுகாட்டின் சுற்றுச்சுவரை இடித்து விட்டதாகவும் , மாதேமங்கலம் கிராமத்தில் வசிக்கும் பொதுமக்களிடம் யாரிடமும் அறிவிக்காமல் சுற்று சுவரை இடித்ததை கண்டித்து மிட்டாரெட்டி அள்ளி - தருமபுரி செல்லும் சாலையில் பொது மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து வந்த அதியமான் கோட்டை காவல்துறையினர் மற்றும் வருவாய்த் துறையினர் மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். தொடர்ந்து உரிய விசாரணை மேற்கொண்டு சுற்றுசுவர் கட்டி கொடுக்கப்படும் என உத்தரவாதம் அளித்ததை தொடர்ந்து பொதுமக்கள் மறியலை கைவிட்டனர். இந்த சாலை மறியலால் தருமபுரி வெங்கடம்பட்டி, குட்டூர், தம்மனம்பட்டி, ஏரிகோடிப்பட்டி, தின்ன ப்பட்டி, மிட்டாரெட்டி அள்ளி ஆகிய பகுதிகளில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது



**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் மனுக்களை பெற்றுக்கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**




**அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி மனிதனை பொருளாக்குதலும் வலுக்கட்டாயமாக வேலைக்கு அமர்த்துதல் வழக்கங்களுக்கு எதிராக மாணவ மாணவிகள் மத்தியில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் டி.சி.மகேஷ் தலைமை தாங்கினார் துறைத்தலைவர்கள் இளங்குமார், ஆர் .தர்ம ரஜினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேராசிரியர் சிவ பிரசாத் உறுதிமொழி வாசித்தார். தொடர்ந்து மாணவ மாணவிகள் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.**

## நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தொடங்கி வைத்தார்!



விருதுநகர், பிப்.11-

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஆவியூர் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு அரசு சாமானிய மக்களும் தரமான மருத்துவ சேவைகளை பெற வேண்டும் என்பதற்காக மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம், இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்த வரிசையில் தமிழ்நாடு அரசு மற்றொரு மருத்துவ சேவை சார்ந்த திட்டமான நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

மாநிலம் முழுவதும் 1,256 நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்களை நடத்தி, அனைத்து வயதினருக்கும், குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கும் அதிநவீன பரிசோதனை சாதனங்கள் மூலம் நோய்களை கண்டறிந்து, நோய் கண்டறியப்பட்டவர்களுக்கு உடனடியாக இலவச சிகிச்சை அளித்து அவர்களின் ஆரோக்கியத்தையும், உயிரையும் காப்பாற்றுவதே நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பொதுவாக தனியார் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனைகள் செய்ய ரூ.15,000 வரை செலவாகிறது. ஆனால், நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் மக்களை தேடிச் சென்று அனைத்து பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், நோய் கண்டறியப்பட்டால், அதற்கான சிகிச்சைகளும், மருந்துகளும் கூட இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

இதனால், கட்டணம் செலுத்தி மருத்துவம் பார்க்க வசதி இல்லாத ஏழை, எளிய மக்கள் பெரியளவில் பயனடைந்து வருகின்றனர். போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத இடங்களிலும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு முகாமின் போது பொதுமக்கள் எளிதாக புரிந்துக் கொள்ளும் வகையில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

இம்முகாமில் உயர் இரத்த அழுத்தம், எக்கோ, எக்ஸ்ரே, நீரழிவுநோய் கண்டறிதல்,மார்பக புற்றுநோய், வாய் புற்றுநோய் பரிசோதனை, மின் இதய வரைபடம், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்,கருப்பை வாய் பரிசோதனை, காச நோய் மற்றும் தொழு நோய், சிறுநீரக நோய் பரிசோதனை, உள்ளிட்ட 24 வகையான இரத்த பரிசோதனைகளும் மற்றும் பொது மருத்துவம், மகளிர் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், கண் மருத்துவம், இயன்முறை மருத்துவம், நீரழிவு நோய் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, குழந்தை மருத்துவம், தோல் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், சித்தா மருத்துவம், எலும்பு மருத்துவம், இருதய மருத்துவம், பல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் போன்ற இலவச சிறப்பு மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இம்முகாமில் குறிப்பிட்டுள்ள பரிசோதனைகள் மட்டும் இன்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்று திறனாளிகளுக்கான அரசு அடையாள அட்டை வழங்குதல், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் வருவாய்துறையினர் மூலமாக வருமானச் சான்றிதழ் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 36 பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதன்படி, காரியாபட்டி வட்டம் ஆவியூரில் 31 ஆவது முகாம் நடைபெற்றது.

மேலும் இந்த சிறப்பு மருத்துவ முகாமில், 3 நபர்களுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகளையும், 5 தூய்மை காவலர்களுக்கு தொழிலாளர் நல வாரிய அட்டைகளையும், 2 நபர்களுக்கு மாற்றுத் திறனாளி அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து, தேசிய குடற்புழு தினத்தினை முன்னிட்டு குடற்புழு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாணவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில், விருதுநகர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யசோதாமணி, மருத்துவத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோயம்புத்தூர் மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை பெற்ற மாற்றுத்திறனாளிகள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!

கோவை பிப்.11-


கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக அரசு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் மூன்று சக்கர சைக்கிள். குழந்தைகளுக்கான நடைவண்டி, மடக்கு சக்கர நாற்காலி, இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், ஊன்றுகோல், கறுப்பு கண்ணாடி மற்றும் மடக்கு கோல்கள், காதொலிக்கருவி, பிரெய்லி கைக்கடிகாரம் உருப்பெருக்கி.பிரெய்லி ரீடர் போன்ற பகரணங்கள் வழங்கப்படுகின்றன.


கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த 07.05.2021 முதல் தற்போதுவரை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் சிறுகுறு தொழில் வங்கிக்கடன் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 121 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.28.15 இலட்சம் வங்கி கடன் உதவியும்,அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 111 பயனாளிகளுக்கு ரூ.45.இலட்சம் மதிப்பீ திருமண நிதியுதவியும்,மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 80 நபர்களுக்கு ரூ.5.60 இலட்சம் மதிப்பீட்டில் சக்கர நாற்காலிகளும்,619 நபர்களுக்கு ரூ.6.26 கோடி மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும்,608 நபர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் காதுக்கு பின் அணியும் காதொலி கருவியும்.831 நபர்களுக்கு ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் திறன் பேசிகளும்,170 மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கு ரூ.11.13 இலட்சம் மதிப்பீட்டில் மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்களையும்.52 நபர்களுக்கு ரூ.5199 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரி ஆப்ரேட்டர் நாற்காலிகளும். 1034 நபர்களுக்கு ரூ.9.18 இலட்சம் மதிப்பீட்டில் இதர உதவி உபகரணங்களும்,பராமரிப்பு உதவித்தொகை,கல்வி உதவித்தொகை ,வாசிப்பாளர் உதவித்தொகை ஆகிய உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 11915 பயனாளிகளுக்கு ரூ.1226 கோடி மதிப்பீட்டில் உதவித்தொகையும். என மொத்தம் 15,541 நபர்களுக்கு ரூ.21:43 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் பெற்ற காயத்ரி கூறியதாவது,

என் பெயர் காயத்ரி. (வயது 37) என்ற நான் தெலுங்குபாளையம். பேரூர் பகுதியில் வசித்து வருகிறேன். கை,கால் குறைபாடு (லிஜ் -90) உடைய நான் ஒரு மாற்றுத்திறனாளி நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து உள்ளேன்.திருமணமாகி 7 வயதில் எனக்கு ஒரு மகன் உள்ளார்.நான் ஜவுளி கடையில் வேலை செய்து வந்தேன்.







எனது நிலைமையை பார்த்து என்னை தனிமைபடுத்தி வந்த நிலையில்,நான் அவ்வேலையில் இருந்து விலகிவிட்டேன். தற்பொழுது உங்களுடன் ஸ்டாலின் முகாமில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டருக்கு மனு அளித்து இருந்தேன்.என் விண்ணப்பத்தினை ஏற்று, பெட்ரோல் ஸ்கூட்டருக்கான நேர்முக தேர்வில் கலந்து கொண்டு தேர்வு குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு எனக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கினார்கள்.

நான் வெளிநிறுவனங்களுக்கு வேலைக்கு செல்லாமல்,இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரின் உதவியுடன் அமேசான் நிறுவனத்தில் டெலிவரி செய்யும் வேலை செய்து மாதந்தோறும் ரூ.11000 /- சம்பாதிக்கிறேன்.

இப்பொழுது வெளியில் சுதந்திரமாக செல்கிறேன்,நானும் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நடக்கிறேன்.எனக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கி உதவிபுரிந்த மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கும் இத்திட்டத்தை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் பெற்ற சுமதி கூறியதாவது,என் பெயர் சுமதி (வயது 50) நான் கோவை துடியலூர் பகுதியில் என்னுடைய கணவன் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன்.நான் கை.கால் குறைபாடு (லிஜ் 60%) உடைய ஒரு மாற்றுத்திறனாளி மாற்றுத்திறனாளியாக இருப்பதால் வேலைக்கு செல்வதில் சிரம்மாக இருந்தது.

எனது குழந்தைகளுடன் வாழ்வாதாரம் இன்றி மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தேன்.மாற்றுத்திறனாளிகளுக்கான முகாமில் கலந்துகொண்டு,தையல் இயந்திரம் வேண்டி மனு அளித்து இருந்தேன்.என் விண்ணபத்தினை ஏற்று தையல் இயந்திரத்திற்கான நேர்முக தேர்விற்கு என்னை அழைத்தார்கள்.தேர்வு குழுவினர் என்னை தேர்வு செய்து. மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலம் எனக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரத்தை வழங்கினார்கள்.


இதன் மூலம் நான் சுயமாக தொழில் செய்து எனது குடும்பத்தையும்,எனது குழந்தைகள் மற்றும் வாழ்வாதாரத்தினை சிரமமின்றி நல்ல வழியில் கொண்டு செல்கிறேன்.தற்போது இந்த சமூகத்தில் நானும் நல்ல நிலைமையில் வாழ்ந்து வருகிறேன். எனக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம் வழங்கி என் வாழ்க்கை தரம் உயர உதவிபுரிந்த மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கும்,இத்திட்டத்தை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொகுப்பு
ஆ.செந்தில் அண்ணா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இரா.சரண்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கோயம்புத்தூர் மாவட்டம்.**



கன்னியாகுமரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உணவு ஊட்டச்சத்து உடல்நலம் தன் சுத்தம் சுகாதாரம் பேணுதல் மற்றும் சிறுதானியங்கள் பாரம்பரிய உணவு திருவிழா நடைபெற்றது. இந்த விழாவில் உணவுகள் சம்பந்தமான பல்வேறு கண்காட்சிகள் நடைபெற்றது இந்த கண்காட்சியை இந்து அறநிலைத்துறை இணை ஆணையர் ஜான்சி ராணி மாவட்ட திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் கௌரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு பிரிவு) அன்பு ஆகியோர் பார்வையிட்டனர் இதில் மகளிர் திட்ட இயக்குனர் நசீர் உதவி திட்ட இயக்குனர்கள் சந்தோஷம் வளர்மதி மற்றும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரி பிரவீன் ரகு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குமரி அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் முதன் முறையாக வாலிபரின் கை ரத்த நாளத்தில் இருந்த கட்டி காப்பீடு திட்டத்தில் அகற்றம்



நாகர்கோவில், பிப்.11-

குமரி மாவட்டம் பூதப்பாண்டியை சேர்ந்தவர் தினேஷ் (36). இவரின் இடது கை அக்கிள் பகுதியின் உள் சுமார் 10 ஆண்டுகளாக வலி இருந்தது. ஆரம்ப காலத்தில் அலட்சியத்துடன் போதிய மருத்துவம் செய்யாத காரணத்தால் அவரது கை உணர்ச்சி இல்லாமல் செயல் இழந்து விட்டது. இதன் காரணமாக தொடர்ந்து அவதிப் பட்டு வந்தார்.

பின்னர் பல மருத்துவ மனைக்கு சென்றும் போதிய நிவாரணம் கிடைக்கவில்லை. இறுதில் கன்னியாகுமாரி அரசு மருத்துவ கல்லூரிக்கு சிகிட்சைக்கு வந்தார். மருத்துவர்கள் மருத்துவ பரிசோதனை செய்துப் பார்த்த போது, அதிர்ச்சி சம்பவம் காத்து இருந்தது.

அதாவது அவரது அக்கிள் உள் பகுதியில் ரத்த நாளத்தில் ஒரு கட்டி வளர்ந்து கொண்டு, கை விரல்களுக்கு செல்ல வேண்டிய ரத்தத்தை நிறுத்தியதும் அதனால் கை செயல் இழந்ததும் கண்டு பிடிக்கப் பட்டது. பின்னர் மருத்துவக் கல்லூரி ரத்த நாளம் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் நோபிள் தலைமையில் மருத்துவர்கள் பல மணி நேரம் போராடி அக்கிளில் இருந்த இரத்த நாளம் கட்டியை அகற்றி விட்டு, அந்த இடத்தில் கால் தொடை பகுதியில் இருந்து சிறிது இரத்த நாளம், அதாவது நரம்பு வெட்டி எடுத்து கட்டி இருந்த இடத்தில் வைத்து தைத்து வெற்றிகரமாக அவர் கையை காப்பாற்றினார்கள்.

தற்போது ரத்த ஓட்டம் சீராக இருப்பதாகவும் தினேஷ் நலமுடன் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்து உள்ளார்கள்.

இது மருத்துவ துறையில் ஒரு சவாலான நிகழ்வாக கருதப்பட்டாலும், இது போன்ற அறுவை சிகிட்சையானது ஒரு சில பேர்பெற்ற தனியார் மருத்துவ மனையில் மட்டும் பல லட்சம் ரூபாய் செலவில் செய்யப்படுவது வழக்கம்.

இந்த நிலையில் தற்போது கன்னியாகுமாரி மாவட்டம் ஆசாரிப்பாள்ளம் அரசு மருத்துவக் கல்லூரியில் முதல் முறையாக தமிழ் நாடு அரசின் கலைஞர் காப்பீடு திட்டத்தின் கீழ் முற்றிலும் இலவசமாக அறுவை சிகிட்சை மருத்துவர்கள் செய்து அசத்தி உள்ளார்கள்.

மருத்துவ குழுவினரை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் லியோ டேவிட், கண்காணிப்பாளர் கிங்சிலி, உறைவிட மருத்துவர் டாக்டர் விஜயலட்சுமி, கலைக்குமார், உதவி உறைவிட மருத்துவர் டாக்டர் ரெனி மோள் உள்ளிட்ட டாக்டர்கள் பாராட்டினர்.

## குழித்துறை நீதிமன்ற வளாகத்தில் கோஷ்டி மோதல் வக்கீல்கள் உட்பட 7 பேர் மீது வழக்கு பதிவு!

மார்த்தாண்டம், பிப்.11-

களியக்காவிளை அருகே மீனச்சல் பகுதியை சேர்ந்தவர் ஜான்சன், இவர் மகன் அஜித் (31). இவர்களுக்கும் அதே பகுதியை சேர்ந்த வக்கீல் விஜயகுமார் (62) என்பவருக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று இது தொடர்பான வழக்குக்காக குழித்துறை நீதி மன்ற த்திற்கு ஜான்சன் உள்ளிட்டோர் சென்றுள்ளார். வாகனம் நிறுத்தும் இடத்தில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு விஜயகுமார் மற்றும் அவருடன் வக்கீல் டேவிட் மற்றும் கண்டால் தெரியும் 2 பேர் சேர்ந்து ஜான்சனை தாக்கி கொலை மிரட்டல் விடுத்து சென்றனர். இதில் பலத்த காயமடைந்த ஜான்சன் குழித்துறை அரசு மருத்துவமனை சிகிச்சை பெற்று வருகிறார். பின்னர் இது குறித்து ஜான்சன் களியக்காவிளை போலீசாரிடம் புகார் அளித்தார். அதன்பேரில் வக்கீல் விஜயகுமார், வக்கீல் டேவிட் மற்றும் கண்டால் தெரியும் 2 நபர்கள் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

இதே போல் வக்கீல் விஜயகுமார் அளித்துள்ள புகாரில் நீதிமன்ற சாலையில் உள்ள அலுவலகத்தில் புகுந்து அவரை அஜின் (31), ஜோயல் (50), ஜான்சன் (57) ஆகியோர் தாக்கியதாக புகார் செய்துள்ளார். போலீசார் இரு தரப்பிலும் 7 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தருமபுரியில் 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நியாய விலை கடை பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்!



தருமபுரி,பிப்ரவரி. 11-

தருமபுரி மாவட்ட தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தின் சார்பில் 15 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் மாவட்ட தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பொது விநியோகத் திட்டத்திற்கான தனித்துறை உருவாக்கப்பட வேண்டும். டி என் சி எஸ் சி எடை தராசம் நியாய விலை கடைகளில் உள்ள விற்பனை முனியத்தை இணைத்து சரியான எடையில் அத்தியாவசிய பொருட்களை பொட்டலமாக வழங்கப்பட வேண்டும். ஐஏஎஸ் தலைமையில் அமைக்கப்பட்ட ஊதிய மாற்ற குழு நகர செயலாளர் இள நிலை உதவியாளர் ஊதியமும், எடையாளருக்கு அலுவலக உதவியாளர் ஊதியமும் பிப்ரவரி இறுதிக்குள் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட வேண்டும். அனைத்து நியாய விலை கடைகளுக்கும் எடையாளர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

அனைத்து நியாய விலை கடைகளுக்கும் கழிப்பிட வசதி ஏற்படுத்தி தரப்பட வேண்டும். ஓய்வு பெற்ற நியாய விலை கடை பணியாளருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். நியாய விலை கடை பணியாளர்களுக்கு நேரடியாக எழுத்தர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மகளிர் நியாய விலைக் கடையை அரசே நடத்தி அப்பணியாளருக்கு ஊதியம் வழங்க வேண்டும். உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் தருமபுரி மாவட்ட தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் நியாய விலை கடை பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




## குமரி கலெக்டருடன் இன்று அரசு தலைமை செயலாளர் காணொளி கூட்டம் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு

நாகர்கோவில், பிப். 11-

குமரி மாவட்ட கலெக்டர் அழகுமீனா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிப்ரவரி மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர் கூட்டம் இன்று புதன்கிழமை கால 10:30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற இருந்தது. இந்த நிலையில் இன்று அதே நேரம் அரசு தலைமைச் செயலாளர் காணொளி காட்சி கூட்டம் நடைபெற உள்ளது. ஆகவே விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 18 ம்தேதி புதன்கிழமை காலை 10:30 மணிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. மேற்படி கூட்டம் கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் வைத்து கலெக்டர் தலைமையில் நடைபெறும். கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து 8. 1. 2026 நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட விவசாயம் தொடர்பான மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மாவட்ட கலெக்டரால் நேரில் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவு செய்யும் வசதி மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) அலுவலகத்தில் செய்யப்பட்டிருக்கும். மாவட்ட கலெக்டரிடம் நேரடியாக தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொல்லங்கோடு பத்திரகாளி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் 22 ஆம் தேதி நடக்கிறது

மார்த்தாண்டம், பிப். 11-

கொல்லங்கோட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற பத்திரகாளி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் பிரபலமான தூக்க நேர்ச்சை திருவிழா மார்ச் மாசம் 13-ஆம் தேதி துவங்கி 22ம் தேதி முடிவடைகிறது. இந்த நிலையில் தூக்க நேர்ச்சை நடைபெறும் கோவில் புதிதாக கட்டப்பட்டு கும்பாபிஷேகம் இந்த மாதம் 22 ஆம் தேதி நடக்கிறது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மூலஸ்தான கோவிலில் வரும் 19ஆம் தேதி காலை 5 மணி முதல் வழக்கமான பூஜைகள் நடக்கிறது. அதே நாள் திருவிழா கோவிலில் காலை 6 மணிக்கு கணபதி ஹோமம், மாலை 5 மணி முதல் பிராசாதப்பரிகாரம்,ஆசாரிய வரணம், கணபதி பூஜை, ரக் ஷோகன ஹோமம், வாஸ்து ஹோமம் உள்ளிட்ட முக்கிய பூஜைகள் நடக்கிறது.

20ஆம் தேதி காலை மூலஸ்தான கோவிலில் வழக்கமான பூஜைகள் முடிந்து, மாலை 5:30 மணியளவில் அம்மன் மூலக் கோவிலில் இருந்து எழுந்தருளி இரவு திருவிழா கோவிலை வந்தடையும் நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து இரவு பூஜை நடக்கிறது. 21ஆம் தேதி திருவிழா கோவிலில் காலை முதல் மதியம் வரை முக்கிய பூஜை நடக்கிறது. 22ஆம் தேதி அதிகாலை கணபதி ஹோமம், தீபாராதனை, கலசாபிஷேகம், பூஜைகள் முடிந்து தேவஸ்தான தந்திரி ஈஸ்வரன் போற்றி தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடக்கிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக தலைவர் வழக்கறிஞர் ராமச்சந்திரன் நாயர் தலைமையில் கோவில் நிர்வாகிகள் செய்துள்ளனர்.

## வேலூர் மாவட்ட புதிய எஸ்.பி. சிவராமன் பொறுப்பேற்பு!



வேலூர், பிப்.11-

வேலூர் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதோடு, குற்றம் நடக்காமல் தடுக்கவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரா குற்றங்கள் மீது தனி கவனம் செலுத்தப்படும் என புதிய எஸ்பி சிவராமன் கூறினார்.

வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த மயில்வாகனன் பணியிட மாற்றம் செய்யப்பட்டதை அடுத்து புதிய ஷிறி யாக சேலம் மாநகராத்தில் துணை காவல் ஆணையராக பணியாற்றி வந்த சிவராமன் வேலூர் எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பின்னர் அவர் அளித்த பேட்டியில்

மாவட்டத்தில் சட்டம் ஒழுங்க பாதுகாக்கவும், தடுக்கவும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். மேலும் பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செய்யல்கள் மீது தனி கவனம் செலுத்தப்படும். தண்டனைக்குறிய குற்றமாக இருந்தால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

போதை ஒழிப்பில் கவனம் செலுத்தப்படும். வேலூர் மாநில எல்லையாக இருப்பதால் அங்கு கூடுதலாக ஒரு சோதனைச்சாவடியை நியமித்து, கூடுதல் காவலர்களை நியமிக்க இருப்பதாகவும். பொது மக்கள் சட்டம் ஒழுங்கை பின்பற்ற வேண்டும், பொது மக்களின் புகாரை தீர்க்க என் நேரமும் எஸ்.பி. அலுவலகம் திறந்தே கிடக்கும், ஒரு புகாருக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் புதிய எஸ்.பி. சிவராமன் கூறினார்.



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா.ஒத்தக்கடை, அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூபாய்.471.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 20 கூடுதல் வகுப்பறைகள் கட்டங்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன் ஆகியோர் உடன் உள்ளனர்

## நாகர்கோவில் ஆயுதப்படை வளாகத்தில் சாலை பாதுகாப்பு ஓவிய கண்காட்சி 3 நாட்கள் நடக்கிறது

### மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் துவக்கினார்!!



நாகர்கோவில், பிப்.11-

கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் அமைந்துள்ள குழந்தைகள் போக்குவரத்து பூங்காவில், சாலை பாதுகாப்பு ஓவியக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 3 நாட்கள் நடக்கிறது. நேற்று (10.02.2026) இதன் துவக்க நிகழ்ச்சி நடந்தது.

இந்நிகழ்ச்சி, மாணவர்களிடையே போக்குவரத்து விதிகள், சாலை பாதுகாப்பு மற்றும் சமூக பொறுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த கண்காட்சியில், மாணவர்கள் மற்றும் பங்கேற்பாளர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படும். காவல் துறையின் மோப்ப நாய் படை பிரிவு செயல்பாடுகள் குறித்தும், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் தொடர்பான காட்சி விளக்கங்கள், மாணவர்களுக்கு காட்சிப்படுத்தப்படுகிறது.

குறிப்பாக சாலையில் உள்ள சிக்னல் போர்டு குறித்து போக்குவரத்து காவல் அலுவலர்களின் விளக்க உரைகள்,

பாதுகாப்பு குறித்த காவல் துறை அலுவலர்களின் விளக்க உரைகள் மற்றும் காணொளி விளக்கங்களும் இடம்பெற உள்ளன.

அதனைத் தொடர்ந்து, மாணவர்களுக்காக வினாடி-வினா போட்டிகள் நடத்தப்படுவதுடன், சாலை பாதுகாப்பு கழக மாணவர்கள் சிறப்பு பங்கேற்பாளர்களாக கலந்து கொண்டு, தங்களது விழிப்புணர்வு செயல்பாடுகளை வெளிப்படுத்த உள்ளனர்.

நேற்று சாலை பாதுகாப்பு குறித்து தயாரிக்கப்பட்ட ரீல்ஸ் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் வினாடி-வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார்.

இந்த மூன்று நாள் நிகழ்ச்சியின் மூலம், குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தி, விபத்துகளை குறைக்கும் நோக்கில் காவல் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

துவக்க நாள் நிகழ்ச்சியில் ஆயுதப் படை துணை காவல் கண்காணிப்பாளர் தகோவிந்தராஜு ,உதவி காவல் கண்காணிப்பாளர் பயிற்சி அங்கிதா , துணை காவல் கண்காணிப்பாளர் பயிற்சி இளஞ்செழியன், போக்குவரத்து மற்றும் ஆயுதப்படை காவலர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## திமுக தேர்தல் அறிக்கை கருத்து கேட்பு கூட்டத்தில் மமக கட்சி சார்பில் மனு



இராமநாதபுரம் பிப்,11-

ராமநாதபுரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை பொதுச் செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி தலைமையில் கருத்து கேட்பு கூட்டம் தனியார் மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராமநாதபுரம் மத்திய மாவட்டம் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக கோரிக்கை மனு வழங்கினர், அதில்,

20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கும் முஸ்லிம் மற்றும் அனைத்து சிறைவாசிகளும் விடுதலை செய்ய வேண்டும்.தமுமுகவின் கோரிக்கையை ஏற்று முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்ட 3.5% இட ஒதுக்கீட்டை 7% உயர்த்தி வழங்க வேண்டும்.இஸ்லாமியர்கள் தொழில் செய்வதற்கு வட்டி இல்லாத கடன் உதவி வழங்க வேண்டும்.சக்கரக்கோட்டை கம்மாய் தூர் வார வேண்டும். கரை அமைத்து பாசனத்திற்கு ஏற்ப நீர் தேக்கம் செய்து பொழுதுபோக்கு பூங்கா அமைக்க வேண்டும்.இராமநாதபுரம் நகர் பகுதியில் கோவில்கள், மசூதிகள், கிறிஸ்துவ ஆலயம், மருத்துவமனைகள் பள்ளிக்கூடங்கள், அருகே செயல்படும் மதுபான கடைகளை நகருக்கு வெளிப்புறம் இடமாற்றம் செய்ய வேண்டும்.தமிழ்நாட்டில் இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாக அண்ணன் தம்பியாக வாழும் சூழலில் மத மோதல்களை உருவாக்கும் விதமாக போலி முகநூலில் வெறுப்பு பிரச்சாரம் செய்து வரும் நபர்கள் மீது கூடுதல் சட்டத்தை கொண்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் அப்துல் ரஹீம், மாவட்ட துணை செயலாளர் காதர் பிச்சை, துணை செயலாளர் ஜாகீர் பாபு, மருத்துவ சேவை அணி மாவட்ட செயலாளர் முகமது தமீம், மாவட்ட தொண்டர் அணி செயலாளர் நைனா முகமது, நகர் தலைவர் முகமது தாஜுதீன், நகர் மருத்துவ சேவை அணி செயலாளர் செய்யது அக்பர், யூசுப் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.